# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 13,200—1962 ජූලි 6 වැනි සිකුරාදා—1962.7.6

13,200 ம் இலக்கம்—1962 ம் ஆண்டு யூலை மாதம் 6 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விளக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நாணயித அறிவித்தல்கள் .. | — |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாஜுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 413 | " மதுவரிச்சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

L. D.—B. 22/59.

### 1959 ம் ஆண்டின் 6 ம் இல. ஊழியர் விடுமுறைச் சட்டம்

1959 ம் ஆண்டின் 6 ம் இல். ஊழியர் விடுமுறைச் சட்டத்தின் 17 ம் பிரிவின் பிரகாரம், தொழில், தேசீயமய சேவை அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, அவரால் ஆக்கப்பட்டு, செனெற் சபையாலும், பிரதிநிதிகள் சபையாலும் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகள்.

ச. விஜேசிங்க,
தொழில், தேசீயமய சேவை அமைச்சர்.

கொழும்பு
1961 ம் ஆண்டு பெப்புருவரி மீ 1 ந் தேதி.

#### ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 1960 ம் ஆண்டின் ஊழியர் விடுமுறை ஒழுங்கு விதிகளென வழங்கும்.

2. (1) இச்சட்டத்தின் 3 ம் அல்லது 4 ம் பிரிவின்கீழ் ஒரு விடுமுறை நாளாக அனுமதிக்கப்படும் எந்நாளுக்கும் முதலாளியொருவர் ஊழிய ரெவருக்கும் கொடுக்கவேண்டிய வேதனம்—

(அ) (i) அவ்வூழியர் வேலைக்கு நேரவீதப்படி வேதனம்பெற உரித் துடையராயின், அந்நாள் ஒரு விடுமுறைநாளாக இல்லாத விடத்து அந்நாளில் சாதாரண வேலை நேரத்திற்கு அவ்வூழியர் வேலை செய்திருப்பின், அவருக்கு உரித்தாகிய வேதனத்திற் குக் குறையாதிருத்தல் வேண்டும் ;

(ii) அவ்வூழியர் துண்டுவீதப்படி வேலைக்கு வேதனம்பெற உரித் துடையராயின், அந்நாள்வரும் வேதனகாலத்தில் அல்லது அந்நாள் வரும் வேதனகாலத்தில் வேலைசெய்யப்படவில்லை யாயின், அவ்வூழியர் கடைசியாக வேலைசெய்த முந்திய வேதனகாலத்தில் அவ்வூழியர் சம்பாதித்த சராசரி வேதனத்திற்குக் குறையாதிருத்தல் வேண்டும். சராசரி வேதன மென்பது உண்மையாக வேலை செய்த நாட்களுக்குரிய மொத்த வேதனத்தை அத்தகைய நாட்களின் தொகையாற் பிரிக்க வரும் தொகையாகும் ;

(iii) அவ்வூழியர், வேலைக்கு, நேரவீதப்படி கணிக்கப்பட்ட தொகையை அல்லது துண்டுவீதப்படி கணிக்கப்பட்ட தொகையை இவற்றுள் கூடுதலான தொகையை வேதனமாகப்பெற உரித்துடைய ராயின், அந்நாள்வரும் வேதனகாலத்தில் அல்லது அந்நாள் வரும் வேதனகாலத்தில் வேலை செய்யப்படவில்லையாயின் அவ்வூழியர் கடைசியாக வேலைசெய்த முந்திய வேதன காலத்தில் அவர் சம்பாதித்த சராசரி வேதனத்திற்குக் குறையா திருத்தல் வேண்டும். சராசரி வேதனமென்பது வேதன காலத்தில் உண்மையாக வேலைசெய்தநாட்களுக்குரிய மொத்த வேதனத்தை அத்தகைய நாட்களின் தொகையாற் பிரிக்க வருந் தொகையாகும்.

(2) சட்டத்தின் 3 ம் அல்லது 4 ம் பிரிவின்கீழ் ஒரு விடுமுறை நாளாக அனுமதிக்கப்படும் எந்நாளுக்கும் கொடுக்கப்படவேண்டிய வேத னம், அந்நாள் வரும் வேதன காலத்திற்குக் கொடுக்கப்படும் வேதனத் துடன் சேர்த்துக்கொடுக்கப்படவேண்டும்.

### முக்கிய அறிவித்தல்

இத்தாற் சகலரின் கவனத்திற்கும் கொண்டு வருவது யாதெனில், உற்பத்திச் செலவு கூடியதன் காரண மாக இலங்கை அரசாங்க வர்த்தமானியின் விளம்பரக் கட்டணங்களைக் கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக் கிறது. தற்போது நடைமுறையிலிருக்கும் முதலாவது அங்குலக் கட்டணம் ரூபா 10 ம் மேலதிக ஒவ்வொரு அங்குலத்திற்கும் ரூபா 5 ம் என்பதற்குப் பதில் ஒரே கட்டணமாக ஒற்றைப்பந்தி அங்குலத்திற்கோ அன்றி அதன் பகுதிக்கோ ரூபா 10, வியாபாரச் சின்னங்கள் தவிர்ந்த ஏனைய விளம்பரங்களுக்கு 1962 ம் ஆண்டு யூலை மாதம் 16 ந் திகதி தொடக்கம் அறவிடப்படும்.

பேர்னட் டி சில்வா,
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகம், கொழும்பு,
1962 ம் ஷு யூன் மீ 29 ந் உ.

(3) இவ்வொழுங்குவிதியின் நோக்கங்களுக்காக, ஓர் ஊழியரைப் பொறுத்தவரையில் வேதனகாலம்—

(அ) அத்தகைய ஊழியருக்கு அவரது வேலைக்கு எக்காலம் சம்பந்தமாக வேதனம் கொடுக்கப்படவேண்டுமோ அக்காலத்தை யாதாயினுமொரு எழுத்துமூலமான சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் முதலாளி விதிக்கவேண்டியவிடத்து அத்தகைய காலமாகும்.

(ஆ) மற்றும் எச்சந்தர்ப்பத்திலும் ஒரு மாதத்தின் முதலாம் நாளன்று ஆரம்பமாகி அம்மாதத்தில் கடைசிநாளன்று முடிவடையும் காலமாகும்.

3. சட்டத்தின் 2 ம் பிரிவின்கீழ் விடுமுறைக் கட்டளையொன்றுக்குட்பட்ட ஊழியரின் முதலாளி ஒவ்வொருவரும் அத்தகைய ஊழியர் வேலை பார்க்கும் தலத்தில் விடுமுறைக்கட்டளையின்கீழ் அத்தகைய ஊழியருக்கு அனுமதிக்கப்பட்ட விடுமுறை நாட்களையும், அத்தகைய விடுமுறைக் கட்டளையிற் குறிக்கப்பட்ட ஊழியரின் வகுப்பையும் விவரணத்தையும் காட்டும் அறிவித்தலொன்றைக் காட்சிக்கு வைத்தல் வேண்டும்.

4. எவராயினுமொரு முதலாளி தமது ஊழியரின் வேதனம், வேலை நேரம் ஆகியன சம்பந்தமாக யாதாயினுமொரு பதிவேட்டையோ, சாசனத்தையோ எழுத்துமூலமான யாதாயினுமொரு சட்டத்தின்கீழ் எழுதிவைக்க வேண்டியவிடத்து, அச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தமது ஊழியருக்குத் தாம் அனுமதித்துள்ள விடுமுறைநாள் ஒவ்வொன்றின் விபரங்களையும், அவ்விடுமுறை நாளுக்குக் கொடுக்கப்பட்ட வேதனத்தின் தொகையையும், ஒரு விடுமுறைக் கட்டளையின்படி ஒரு விடுமுறை நாளாகப் பிரகடனஞ் செய்யப்பட்டுள்ள யாதாயினுமொரு நாளில் சட்டத்தின் 4 ம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் எவராயினுமொரு ஊழியருக்கு வேலை கொடுப்பதைத் தொழிற் கொமிஷனர் அனுமதித்துள்ளவிடத்து அவ்விடுமுறை நாளுக்குப் பதிலாக வேறொரு விடுமுறைநாளை அத்தகைய ஊழியருக்கு அம்முதலாளி அனுமதிக்கவில்லையாயின் அவ்விடுமுறைநாளன்று அத்தகைய ஊழியர் செய்த வேலைக்குக் கொடுக்கப்பட்ட வேதனத்தின் தொகையையும் அத்தகைய பதிவேட்டில் அல்லது சாசனத்தில் அவர் உள்ளடக்குதல் வேண்டும்.

5. சட்டத்தின் 7 ம் பிரிவின் நோக்கங்களுக்காகத் தொழில் உத்தியோகத்தர் ஒவ்வொருவரும் விதிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தராவர்.

6. சட்டத்தின் 10 ம் பிரிவின்கீழ் கொடுக்கப்படவேண்டிய அறிவித்தலொவ்வொன்றும் இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட பத்திரத்தின் பொருளமைய இருத்தல் வேண்டும்.

7. வழக்கமாக நாள்வீதம் அல்லது துண்டுவீதம் அல்லது பயணவீதம் செய்யப்படும் எவ்வேலையினும் அமர்த்தப்படும் ஊழியருக்கு இச்சட்டம் இயைபுடையதன்று.

8. இவ்வொழுங்குவிதிகளில் " சட்டம் " என்பது 1959 ம் ஆண்டின் 6 ம் இல. ஊழியர் விடுமுறைச் சட்டமெனப் பொருள்படும்.

**அட்டவணை**

பத்திரம்

6 ம் ஒழுங்குவிதி.

**1959 ம் ஆண்டின் 6 ம் இல. ஊழியர் விடுமுறைச் சட்டம் 10 ம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

..........................................க்கு,

..........................................

..........................................

(விலாசம்)

உங்களிடம் வேலைபார்த்த ஊழியராகிய ....................

........க்கு/ஆகியோருக்கு, ....................................ல்

வந்த அரசாங்க விடுமுறைநாள்/விடுமுறைநாட்கள் சம்பந்தமாக,......

............................ல் வந்த அரசாங்க விடுமுறைநாளுக்கு/

விடுமுறை நாட்களுக்குப் பதிலாக ....................ல் அனுமதித்த விடுமுறை நாளுக்கு/விடுமுறைநாட்களுக்கு 1959 ம் ஆண்டின் 6 ம் இல. ஊழியர் விடுமுறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கொடுக்க வேண்டிய வேதனத்தைக் கொடுக்கத் தவறியதற்காக ............

..........................................................

நீதிமன்றத்தில் உங்களுக்கெதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கில்,......

....................................ஆகிய நான் இதனகத்தேயுள்ள அட்டவணையின் 1 ம் பத்தியிற் குறிக்கப்பட்ட ஊழியர்கள் உங்களிடம் வேலைபார்த்தவர்களென்பதால் அவர்களுக்கு அட்டவணையின் II ம் பத்தியில் அவ்வூழியரின் பெயருக்கு/பெயர்களுக்கு எதிரே குறிக்கப்பட்ட விடுமுறைநாட்களுக்குச் சட்டத்தின் பிரகாரம் கொடுக்க வேண்டிய வேதனத்தை நீங்கள் கொடுக்கத் தவறியதற்கு மேற்கூறிய சட்டத்தின் 10 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் சான்று எடுத்துக் காட்டவிருக்கிறேன் என்பதை அறியவும்.

....................................

மனுதார்

தேதி : 196.... ம் ஆண்டு ............மாதம் ........ந் தினமாகிய இன்று
இடம் :

**அட்டவணை**

| I ம் பத்தி. | II ம் பத்தி. |
| --- | --- |
| ஊழியரின் பெயர் | சட்டத்தின் பிரகாரம் வேதனம் கொடுக்கப்படாத விடுமுறை நாட்கள். |

7–13.

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3·30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3·30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள்யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு. அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய கிரய விகிதங்கள்

## "இலங்கை அரசாங்க வர்த்தமானி (கசெற்)"

வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் **வேண்டும்.**

3. கிழமை **நாட்களில்** மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், **சனிக்கிழமைகளில்** மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணம் கொடுக்கல் **வாங்கல் முடிவுறும்.**

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும்** முற்பணம் அனுப்பப்படல்வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல்வேண்டும்.

6. " நகலை " **கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக " ரைப் "** அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் **தவிர்க்க** ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப் பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக கொள்ளப்பட**மாட்டா.**

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறொக்ரறுல் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட **மாட்டா.**

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1962 ம் ஆண்டு யூலை மாதம் 16 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய ... ... ... | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி ... ... | 10 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் ... ... ... | 110 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் ... ... ... | 220 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள்** (சாதாரணமாக **திங்கட் கிழமை பி. ப. 3.30 மணி**) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. **சந்தா விபரம் :**

அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு)

| | உள்ளூர் | | | வெளியூர் | |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ச. | | ரூ. | ச. |
| ஒவ்வொரு **பகுதியும்** ... ... ... | 22 | 50 | ... | 35 | 50 |
| **முதற் பகுதியின் தனிப்பிரிவு** ... ... ... | 12 | 50 | ... | 18 | 0 |
| முதற் பகுதியின் இருபிரிவுகள் ... ... ... | 20 | 0 | ... | 28 | 0 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை | | தபாற் செலவு (உள்ளூர்) |
|---|---|---|---|
| | சதம் | | சதம் |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 25 | ... | 20 |
| (ii) **வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் ஒவ்வொரு பகுதியும்** ... ... ... | 50 | ... | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 10 | ... | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 20 | ... | 15 |

இவைகளில் **எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத் தொகையை,** அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் **பெட்டி 500, கொழும்பு,** என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் **விற்பனை செய்வதற்கும்** இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

இலங்கை, வாழைச்சேனை எம்பரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.